
பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 01 புதன்கிழமை 17.09.2025 | அதிர்வு 48


**இலங்கை மீதான புதிய பிரேரணை:**

## ஒத்திவைக்கும் கோரிக்கையை அடியோடு நிராகரித்த பிரிட்டன்



பிரிட்டன் தலைமையிலான தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர் 02


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மஹிந்த - விமல் அவசர சந்திப்பு

## தெற்கு அரசியலில் பரபரப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச, அம்பாந்தோட்டை, தங்காலை - கார்ல்டன் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர், விமல் வீரவன்ச தனது பேஸ்புக் கணக்கில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

“பல தசாப்தங்களாக வளர்க்கப்பட்ட விடுதலைப்புலி பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருந்த போதி 03

# சஜித் கட்சியில் சங்கமித்த உறுப்பினர்களுக்கு எதிரான அனைத்து தடை உத்தரவுகளும் நீக்கம்

## ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அதிரடி முடிவு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த உறுப்பினர்கள் மீது முன்னர் விதிக்கப்பட்ட அனைத்து தடைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் நீக்க முடிவு செய்துள்ளது.

கொழும்பு, புறக்கோட்டையில் உள்ள சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு 02

# தென்னிலங்கையில் விபத்தில் சிக்கி 3 மாத பெண் குழந்தை பரிதாபச் சாவு!

கொழும்பு – கண்டி பிரதான வீதியில் ரோஹன விகாரைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று பாதசாரி கடவையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது



மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த பெண் குழந்தை ஒன்றும் சிறுவன் ஒருவரும் காயமடைந்த நிலையில் கொழும்பு றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 3 மாத பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சஜித் கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது, இந்த நடவடிக்கையால் ஏற்படக் கூடிய சாத்தியமான சட்ட ரீதியான தாக்கங்களை ஆய்வு செய்வதற்காக முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திலக் மாரப்பன தலைமையிலான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதைத் தடுத்திருந்த தடைகளை இந்த நடவடிக்கை நீக்கியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதிலிருந்து கூட்டு அரசியல் முயற்சிகளை ஆதரித்த அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

## ஒத்திவைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை குறித்து நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலின்போது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுமாறு சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கையைப் பிரிட்டன் நிராகரித்துள்ளது.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்துரைத்த இலங்கைப் பிரதிநிதி, நாட்டில் இனப்பிரச்சினை நடைபெறவில்லை எனவும், மாறாக பயங்கரவாத மோதலே நடைபெற்றது எனவும் தெரிவித்துள்ளதுடன் அதனைத் தீர்ப்பதற்குச் சிறப்புப் பொறிமுறைகள் எவையும் தேவையில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்க நாள் அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கினால் இலங்கை குறித்த எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அந்த அறிக்கை மீதான விவாதம் இடம்பெற்றது.

அதேவேளை இலங்கை தொடர்பில் பேரவையில் ஏற்கனவே கால நீடிப்பு செய்யப்பட்டு நடைமுறையில் இருந்த 57/1 தீர்மானம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், இம்முறை கூட்டத் தொடரில் இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் திருத்தங்கள் உள்வாங்கப்படாத 60/எல்.1 எனும் முதலாவது வரைவு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தப் பிரேரணை தொடர்பான உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பி.ப. 1 மணிக்கு ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டன், வட அயர்லாந்து, கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா ஆகிய நாடுகளின் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதிகளும், பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கைக்கு ஆதரவான மற்றும் எதிரான சில நாடுகளின் பிரதிநிதிகளும், ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதிவதிவிடப்பிரதிநிதி உள்ளிட்ட அதிகாரிகளும், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை அரசின் சார்பில் கருத்து வெளியிட்ட வதிவிட அலுவலகப் பிரதிநிதி, இலங்கையில் இனப்பிரச்சினை நடைபெறவில்லை எனவும், மாறாக பயங்கரவாத மோதலே நடைபெற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறப்புப் பொறிமுறையொன்று அவசியமில்லை என்றும், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் ஊடாகவே இதற்குத் தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்தல், நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்தியமைத்தல் என்பன உள்ளடங்கலாக அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் வகையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுமாறு சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை இலங்கை அரசால் இணை அனுசரணை நாடுகளிடம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டதாகவும், அதற்குப் பதிலாகப் புதிய பிரேரணையை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பைக் கோராதிருப்பதாகப் பேரம் பேசியதாகவும், இருப்பினும் அதனைப் பிரிட்டன் மறுத்துவிட்டதாகவும் அறியக் கிடைத்தது. அதேபோன்று நேற்றுமுன்தினம் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பிரிட்டன் மறுத்துவிட்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறு தற்போது சமர்ப்பித்திருக்கும் புதிய பிரேரணையை நிறைவேற்றுவதில் தாம் கொண்டிருக்கும் உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்திய பிரிட்டன் உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கை வாக்கெடுப்பைக் கோரினாலும், புதிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் போதுமான வாக்குகள் தம்வசம் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளனர்.

# 223 கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் யாழ். பல்கலைக்கு ஐந்து மாடிக் கட்டடம்

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்துக்கு 223 கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் 5 மாடிக் கட்டடம் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்துக்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள், கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இந்தக் கட்டடம் அமையவுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத் துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

“2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தாலும் நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால், பீடத்தில் உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் விதமாகவே புதிய கட்டடம் அமையவுள்ளது.” – என்று அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள்களுடன் மூன்று இளைஞர்கள் கைது!

(க.கிஷாந்தன்)

ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கினிகத்தேனை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

ஓட்டோ ஒன்றில் கஞ்சா கொண்டு செல்லப்படுகின்றது எனக் கினிகத்தேனை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டு, கினிகத்தேனை – பிளாக் வாட்டர் பகுதியில்

ஓட்டோவை நிறுத்தி சோதனை செய்தனர். இதன்போது ஓட்டோ சாரதியிடம் ஒரு கஞ்சா பொட்டலமும், பின் இருக்கையில் பயணித்த சந்தேகநபரிடம் 14 கஞ்சா பொட்டலங்களும், ஒரு ஐஸ் போதைப்பொருள் பொட்டலமும் கண்டுபிடிக்கப்பட்டன.

சந்தேகநபர்களைக் கைது செய்து விசாரித்தபோது, 15 பொட்டலங்களில் பொதி செய்யப்பட்ட 14 ஆயிரத்து 630 மில்லிகிராம் கஞ்சா அவர்களிடம் இருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகநபரிடம் இருந்து ஐஸ் வாங்கிய கடத்தல்காரர் பற்றிய தகவல்களைப் பெற்று, வட்டவளை பகுதியில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தபோது அந்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரின் வீட்டைச் சோதனையிட்டபோது, விற்பனைக்காகத் தயாரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 190 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் 70 பொட்டலங்களைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் 20 – 25 வயதுக்குட்பட்டவர்கள். கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் ஈஸிகேஷ் முறை மூலம் பணத்தைப் பெற்று, போதைப்பொருட்களை விற்பனை செய்வது தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் ஓட்டோவுடன் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று கினிகத்தேனை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹட்டன் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர, உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஸ்ஸங்க கொடமுன்ன மற்றும் கினிகத்தேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் விராஜ் விதானகே ஆகியோரின் மேற்பார்வையில், கினிகத்தேனை பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து திரும்பி தங்காலை – கார்ல்டன் இல்லத்தில் குடிபெயர்ந்தார் என்ற செய்தி, இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பெரும் கவனத்தை ஈர்த்த செய்தியாகும்.

அரசியல் வேறுபாடுகள் இருந்த போதிலும், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க அவர் வழங்கிய அரசியல் தலைமைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு செயலாகும்.

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் பிற பிரதிநிதிகள் தங்காலை – கார்ல்டன் இல்லத்தில் அவரைச் சந்தித்து அவரது நலம் குறித்து விசாரித்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.” – என்றுள்ளது.



மொட்டுக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறி இருந்த விமல் அணியினர், மஹிந்த ராஜபக்ஷவை நேற்று அவசரமாகச் சந்தித்துப் பேசியுள்ளமை தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# எட்டு மாதங்களில் 524 பெண்கள் போதைப்பொருள்களுடன் கைது!

இலங்கையில் கடந்த 8 மாதங்களில் போதைப்பொருள் சார் குற்றங்கள் தொடர்பில் 524 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

22 முதல் 60 வயதுக்கு உட்பட்ட பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, கடந்த 2024 ஆம் ஆண்டு போதைப்பொருள்கள் வைத்திருந்த சம்பவம் தொடர்பில் 2 இலட்சத்து 28 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரின் தரவுகள் குறிப்பிட்டுள்ளன. இது, 2023 ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 41 சதவீத அதிகரிப்பாகும்.

2024இல் 832.3 கிலோ ஹெரோயின், 8 ஆயிரத்து 359 கிலோ கஞ்சா மற்றும் 1,364 கிலோ ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கொழும்பின் பலிக்காத முயற்சி!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய நடப்புக் கூட்டத் தொடரில் தனக்கு எதிராக நிறைவேற்றப்பட இருக்கும் பிரேரணையை முன்னையவற்றுலும் விட இயன்றவரை வலுக் குறைந்ததாக மாற்ற - நீர்த்துப் போகச் செய்ய - தன்னால் இயன்ற எல்லா முயற்சிகளையும் இலங்கை கையாளுகின்றது.

நட்பு நாடுகளைப் பயன்படுத்தி இந்தப் பிரேரணையை வலுவிழக்கச் செய்யும் முயற்சியை கொழும்பு தந்திரமாக நகர்த்த முயல்வதாகத் தெரிகிறது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தவோ, உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தவோ, நீதி, நியாயத்தை நிலைநாட்டவோ விரும்பாத கொழும்பு ஆட்சி பீடம், அந்த விடயங்களை ஒட்டிய சான்றுகள், ஆதாரங்கள், சாட்சியங்கள், ஆவணங்களைத் திரட்டும் நடவடிக்கை தனக்கு நிரந்தர ஆபத்தாக முடியும் என்று கருதுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னைய தீர்மானங்களுக்கு அமைய, அவ்வாறு ஆதாரங்களைத் திரட்டி சேகரிக்கும் நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் ஏற்கனவே முன்னெடுத்து வருகின்றது. சுமார் இரண்டு லட்சம் ஆவணங்கள், ஆதாரங்கள், சாட்சியங்கள், சான்றுகள் இவ்வாறு பதியப்பட்டு, சேகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டிகின்றன என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்த நிலைமை தொடர்ந்து, ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுமானால், நீதி, நியாயமான விசாரணைகளை இப்போதைக்கு முறியடித்துத் தள்ளிப் போட வைத்தாலும், பின்னர் காலகதியில் விவகாரம் தன் தலைக்கு வரும் என்பதை கொழும்பு நன்கு அறிந்திருக்கின்றது.

யுத்த கால விடயங்கள் பற்றிய சான்றாதாரங்களைத் திரட்டி சேமிக்கும் நடவடிக்கை தன் தலையின் மேல் தொங்கும் கத்தி என்பதை உணர்ந்து கொண்டுள்ள கொழும்பு அந்த நடவடிக்கைகளை நிறுத்தச் செய்கின்ற முயற்சிகளை இயன்றவரை மேற்கொள்கின்றது.

இலங்கை தொடர்பாக இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணையில் அவ்வாறு ஆதாரங்களை திரட்டிச் சேகரிக்கும் திட்டத்தை இரண்டு வருடங்களுக்காவது பிற்படுமாறு கோரும் வாசகத்தைச் சேர்க்கும்படி இலங்கையின் நட்பு நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகியன கோரிக்கை விடுத்திருந்தன.

ஆனால் இலங்கை தொடர்பான பிரேரணையைக் கொண்டு வரும் பிரிட்டன் தலைமையிலான இணையனுரசணை நாடுகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டன என்று தெரிகிறது.

மேற்படி பிரேரணையின் நகல் வடிவம் வெளியாகிவிட்டது. அதில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றிய உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலங்கைநேரப்படி பிற்பகலில் நடைபெற்ற போது, இந்த கோரிக்கை பாகிஸ்தான் மற்றும் சீனாவினால் முன்வைக்கப்பட்டது.

தாங்கள் புதிய பிரேரணையை சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள பிரிட்டன் உள்ளிட்ட இணையனுரசணை நாடுகள், இந்த விடயத்தில் இலங்கை வாக்கெடுப்பைக் கோரினாலும் அந்தப் புதிய பிரேரணையை நிறைவேற்றுவதற்குப் போதுமான ஆதரவைத் தாங்கள் உறுப்பு நாடுகளில் பெற்றிருக்கின்றனர் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

ஆகவே ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கையை இடைநிறுத்தச் செய்யும் கொழும்பின் முயற்சி பெரும்பாலும் பலிக்காது என்றே தெரிகிறது.




# திருமலை மாவட்ட செயலகம் முன்பாக முத்துநகர் விவசாயிகள் இன்று போராட்டம்!

**(ஹஸ்பர்)**

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் தங்களின் விவசாய நிலங்களை அபகரித்து தனியார் கம்பனிகளுக்காக சூரிய மின் சக்தி திட்டத்துக்கு வழங்கப்பட்டதையடுத்து இன்று (17)திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்ட முண்ணனியின் செயற் குழு உறுப்பினர் வசந்த முதலிகே உட்பட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், முத்துநகர் விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது அபகரிக்கப்பட்ட விவசாய காணிகளை மீட்டு தருமாறு போராட்டத்தில் பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டிருந்தனர்.

விவசாயிகளிடம் இருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பி கொடு, நெல் வயல்கள் இல்லாமல் நாங்கள் மண்ணையா சாப்பிடுவது, பொய்கள் வேண்டாம் போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன் போது கருத்துரைத்த விவசாயிகள், தற்போது மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் விவசாய செய்கைக்கான தயார்



நிலைபடுத்த வேண்டியுள்ளது. மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது நிலங்களை தருவதாகம் சோலர் திட்டம் இல்லாத நிலங்களில் விவசாய செய்கை ஆரம்பிக்க முடியும் என்றும் கூறிவிட்டு தொடர்ந்தும் கம்பனிகளுக்கு விளை நிலத்தை வழங்குகின்றனர்.

குறித்த போராட்டத்தைத் தொடர்ந்து உண்ணாவிரதமாக நடத்தவுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.





# ஹட்டன் டிக்கோய நகரசபையில் உள்ளூராட்சி வார ஆரம்ப நிகழ்வு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் தொனிப்பொருளில் ஹட்டன் டிக்கோயா நகரசபையின் தலைவர் அசோக்க கருனாரத்ன தலைமையில் உள்ளூராட்சி வார ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது.

இதில் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான மஞ்சுல சுரவீர ஆராய்ச்சி மற்றும் கிருஷ்ணன் கலைச் செல்வி, ஹட்டன் பொலிஸ் வலயத்துக்குப் பொறுப்பான பிரதீப் வீரசேகர மற்றும் ஹட்டன் டிக்கோயா நகர சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போதுதேவையுடையோருக்கான கண் பரிசோதனையும் இடம்பெற்றது.





## நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில்

# இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு விசேட பூஜை






(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இன்று (17) இடம்பெற்றன. அடியார்களுக்கு வழமைபோல அன்னதானமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு விசேட பூஜை ஏற்பாடுகளை நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் நிர்வாக சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

ஆலயத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமை யில் நடைபெற்ற இந்தப் பூஜை வழி பாடுகளின் போது பிரதமர் நரேந்திர மோடிக்கு நீண்ட ஆயுளும் நோய் நொடியற்ற வாழ்வும் அமைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்யப்பட்டது.

கடந்த காலங்களில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் மலையக மக்களுக்கும் அவர் செய்த சேவைகளுக் காகவும் அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவுமே இந்த விசேட பூஜை அவரு டைய 75 ஆவது பிறந்த தினத்தை முன் னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வடக்கு ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய பெண் நாய்களுக்கு இலவசமாகக் கருத்தடை!

வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலுக்கு அமைவாக வடக்கு மாகாண உள்ளூராட்சி, விவசாய மற்றும் சுகாதார அமைச்சுக்கள் இணைந்து முன்னெடுக்கும், பெண் நாய்களுக்கு இலவசமாக கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் செயற்றிட்டமானது பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளின் பூரண ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கடந்த வாரத்தில் மாத்திரம் 257 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துவரும் சூழலில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் வடக்கு மாகாணத்தின் மூன்று அமைச்சுகள் இணைந்து முன்னெடுக்கும் வகையில் மூன்றாண்டு கால செயற்றிட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாகக் கடந்த புதன்கிழமை (10) தொடக்கம் நல்லூர் மற்றும் வலி. கிழக்கு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பெண் நாய்களுக்கு இலவசமாக கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் செயற்றிட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இந்த வாரமும் இன்று புதன்கிழமை (17) தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை நல்லூர் மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்படி செயற்பாடு முன்னெடுக்கப் படவுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. தொடர்ந்து மாகாணத்தின் ஏனைய இடங்களிலும் கால அட்டவணைபடி இந்தச் செயற்பாடு இடம்பெறும்.

பொது மக்கள் தமது வீடுகளில் உள்ள பெண் நாய்களைக் கொண்டுவந்து குறித்த தினங்களில் இலவசமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளமுடியும். அதேவேளை நாய்களைப் பிடித்து வழங்க விரும்புபவர்கள் நாய் பிடிப்பாளர்களாக பிரதேச சபைகளில் பதிந்து, தமக்கான முற்தடுப்பு ஊசிகளை பெற்று நாய்களைப் பிடித்து வழங்கமுடியும். பிடித்து வழங்கும் நாய் ஒன்றுக்கு 600 ரூபாவை பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.







# கிளிநொச்சி வடக்கு வலயத்தில் முன்பள்ளிகள் புனரமைப்பும் சிறார்களுக்கான நூல் வெளியீடும்

அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் அனுசரணையுடன் கிளிநொச்சி வடக்கு வலயத்தில் பல முன்பள்ளிகள் புனரமைப்பு செய்யப்பட்டன. அத்துடன் கற்றல் உபகரணத் தொகுதிகள் மற்றும் ஒலிபெருக்கி தொகுதி என்பவை வழங்கப்பட்டன. சிறார்களுக்கான ஓவியக்கதை நூல்கள் இரண்டும் வெளியிடப்பட்டன.

இந்த நிகழவுக்கு ஐ.எம்.எச்.ஓ. தலைவி இராஜம் தெய்வேந்திரன் மற்றும் இலங்கைக்கான பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், இணைப்பாளர் துஷாந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா, முன்பள்ளிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜயநாதன் மற்றும் 125 முன்பள்ளிகளதும் ஆசிரியர்கள், சிறார்கள், அவர்களின் பெற்றோர் ஆகியோர் பங்குபற்றினர்.

அனைத்துச் சிறார்களும் மேடை நிகழ்வில் பங்குபற்றி மகிழ்ந்தனர்.

சிறப்பான இந்த நிகழ்வு பளை பிரதேசத்தில் கலைமகள் முன்பள்ளி முன்றலில் கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

புனரமைப்பு செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்ற முன்பள்ளிகளின் பெயர்பலகைகள் திரை நீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டு சமூகத்திடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து அரங்கில் சிறார்களுக்கான ஓவியக் கதை நூல்கள் இரண்டு வெளியிடப்பட்டன.

இச் சித்திரக்கதை ஓவியங்களை முத்து இராதாகிருஷ்ணன் வரைந்தார். அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பதிப்பாக தலைவி இராஜம் தெய்வேந்திரனால் வெளியிட்டு வைக்கப்பட்டது.










# நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனுடன் விநாயகர்புரம் விவசாயிகள், இளைஞர் சந்திப்பு

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு விநாயகபுரம் இளைஞர்கள் மற்றும் விவசாயிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்லதம்பி திலகநாதனுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இளைஞர்களுக்கான விளையாட்டு மைதானம் இன்மை, வயற்காணி பிரச்சினைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இன்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக வவுனிக்குளத்தின் கீழான 36 ஆம் வாய்க்காலின் கீழான வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன.

இந்த வாய்க்காலானது அண்மையில் அரச நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் இந்தப் பிரச்சினை தொடர்கிறது என்று விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன், தொலைபேசி மூலமாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு இது தொடர்பில் வினவியபோது மாவட்ட பிரதி நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளரிடம் பிரச்சினை தொடர்பில் தெரிவிப்பதாகக் கூறினார்.

பின்னர் மாவட்ட பிரதி நீர்பாசன பணிப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினரை தொடர்பு கொண்டு, இந்த வருடத்தின் கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் போது குறித்த வாய்க்கால் ஊடாக நீர் வழங்கப்பட்டு விவசாயிகளுக்கான முழுமையான தீர்வு வழங்கப்படுமென உறுதியளித்தார்.

இதேவேளை விநாயகபுரம் கிராம இளைஞர்களால், இளைஞர்களுக்கான விளையாட்டு மைதானம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரிடம் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தொடர்பு கொண்ட போது,

விளையாட்டு மைதானத்துக்கு உரிய காணியைப் பொருத்தமான இடத்தில் வழங்க தான் நடவடிக்கை எடுப்பார் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை வழங்கப்படும் மைதானத்துக்கான அபிவிருத்தி பணிகளையும், பூவரசங்குளம் பொன்னகர் கிராமங்களுக்கான விளையாட்டு உபகரண திட்டங்களையும் வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன்,

எங்கள் மாவட்டம் போரால் அழிந்த மாவட்டம். இதை கல்வியிலும் விளையாட்டிலும் தான் நாம் கட்டி எழும்ப முடியும்.

இந்த தேசத்தை கஞ்சாவாலும் கசிப்பாலும் நாம் அழிந்து போக அனுமதித்துவிட முடியாது.

ஒரு பறவை மரத்தில் இருப்பது கிளையை நம்பி அல்ல அது தனது இறகை நம்பியே இருக்கின்றது.

அது போல இளைஞர்களாகிய நீங்களும் உங்களை நம்புங்கள் , முன்னேறுங்கள் உங்களுக்குப் பின்னால் நாங்கள் இருப்போம்.– என்றார்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் துணுக்காய் பிரதேச சபை உறுப்பினரான தர்மதாஸ் தனுசந்தன் மற்றும் அமைப்பாளர்களான மதன்ராஜ், கிருஸ்ணகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பொது அமைப்புக்கள் அனைத்தும் ஆதன வரியைச் செலுத்த வேண்டும்

## வவுனியா தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் வேண்டுகோள்

(கி.வசந்தன்)

பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பொது அமைப்புக்கள் நிலுவையில் உள்ள ஆதன வரியினை செலுத்த வேண்டும் என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா. பாலேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று (16) வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் உள்ளூராட்சி வாரம் தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இவ்வாரம் முழுவதும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கூமாங்குளத்திலே நடமாடும் சேவைகள் இடம்பெற்றிருந்தன.

சுற்றுசூழல் மற்றும் மரநடுகைகள் செயற்பாடுகள் ஒவ்வொரு வட்டாரத்தையும் பிரதிநிதிப்படுத்தி ஒவ்வொரு பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் நேரிய குளம் வீதியில் 300 மரக்கன்றுகள் நடுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.




17 ஆம் திகதி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தினமும், 18 ஆம் திகதி வருமான ஊக்குவிப்பு தினம், 19 ஆம் திகதி இலக்கிய மற்றும் ஊக்குவிப்பு தினம், 20 ஆம் திகதி பொதுப் பண்பாட்டு தினமும் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை விளையாட்டு மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன், தெற்கு தமிழ் பிரதேச சபையால் மகாறம்பைக்குளம் பகுதியில் ஆதனவரி மதிப்பீடு தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரதேச சபைக்கு உட்பட்ட ஆதனங்களில் இருந்து 12 சதவீதமே தற்போதும் அறவிடப்பட்டு வருகின்றது.

எமது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் தாங்களாகே வருகை தந்து வரிப்பணத்தை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் நடமாடும் சேவைகள் மூலமாகவும் வரிசெலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு நாம் தெளிவூட்டி வருகின்றோம்.

மக்களின் வரிப்பணத்தின் மூலம் வட்டாரங்களில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். குறிப்பாகக் கிராமங்களில் உள்ள பொது அமைப்புகள் ஆதன வரியைச் செலுத்தாத நிலைமை உள்ளது. எனவே அவர்கள் தாங்களாக முன்வந்து நிலுவையில் உள்ள தொகையை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார்.





# அரியாலை – இலந்தைக்குள வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன் )

இலங்கை முழுவதும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 100 வீதிகள் புனரமைப்பு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், அரியாலை – இலந்தைக்குள வீதி புனரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

890 மீற்றர் நீளமான இலந்தைக்குள வீதியானது 21.5 மில்லியன் ரூபா நிதியுதவில் 'காப்பெட்' வீதியாக புரனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் குரூஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# தெதுரு ஓயா மீன்பிடிப் போட்டி 2025 எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்த எற்பாடு

(உடப்பு க.மகாதேவன்)

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் கடந்த இரண்டு வருடங்களில் மிக வேகமாகப் பரவியுள்ள 'ஜயன்ட் ஸ்னேக்ஹெட்' மீன்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், "தெதுரு ஓயா மீன்பிடிப் போட்டி 2025" எனும் பெயரில் விசேட மீன்பிடிப் போட்டியும் பாதுகாப்புச் செயற்றிட்டமும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டம், கடற்றொழில் அமைச்சின் பூரண வழிகாட்டலின் கீழ், அங்லிங் பிரஜாவ ஸ்போர்ட் ஃபிஷிங் கிளப் மற்றும் அப்பிரதேச மீனவ சங்கங்களின் நேரடிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.

அங்லிங் பிரஜாவ சங்கத்தின் பிரதம போஷகர் பிரசன்ன பிரியகெலும் விக்ரமரத்ன குறிப்பிடுகையில், இந்தப் போட்டி நிகழ்வின் மூலம் ஒரே நாளில் பெருமளவிலான ஆக்கிரமிப்பு மீன்களைச் சூழலிலிருந்து அகற்ற முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் மூலம் ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றுவது மற்றும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்து போன்றவற்றுடன் அந்தப் பிரதேச மீனவ சமூகத்தை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவோருக்கு பணப் பரிசுகள் வழங்கப்படும் அதேவேளை, தெதுரு ஓயா பகுதி மீனவ சமூகத்தினருக்கென பிரத்தியேகமாக 15 மீன்பிடிப் படகுகள், 3 தூண்டில் சுழற்சிகள் அடங்கிய பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.



# இந்தியா - அமெரிக்கா இடையே டில்லியில் இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை

இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை டில்லியில் நேற்று மீண்டும் தொடங்கியது.

அமெரிக்க வர்த்தகத் துறை பிரதிநிதி பிரெண்டன் லிஞ்ச் தலைமையிலான குழுவினருடன் மத்திய வர்த்தகத் துறை செயலர் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இது ஆக்கப்பூர்வமாக இருந்ததாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. விரைவில் நடைபெற உள்ள அடுத்த சுற்று பேச்சுவார்த்தையில் வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என அமெரிக்க தரப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருள்களுக்கு அதிக வரி விதிப்பதாக குற்றம்சாட்டினார். இதையடுத்து, உலக நாடுகள் விதிக்கும் வரிக்கு ஏற்ப பதில் வரி விதிக்கப்படும் என்று கூறிய அவர், அதற்கான பட்டியலை வெளியிட்டார். பின்னர் 90 நாடுகளுக்கு அந்த நடவடிக்கையை தள்ளிவைத்தார்.

இதற்கிடையே, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த உலக நாடுகள் முன்வந்தன. இதில் சில நாடுகளுடன் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியா உள்ளிட்ட சில நாடுகளுடனான பேச்சுவார்த்தை முடியவில்லை. ஆனாலும், 90 நாள் காலக்கெடு முடிந்ததும், உலக நாடுகள் மீதான வரி விதிப்பு அமலுக்கு வந்தது.

இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக 5 சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட வேளாண் விளை பொருள்கள், பால் பொருள்களுக்கான சந்தையை திறக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா ஏற்கவில்லை. இதனால், உடன்பாடு ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையே, இந்திய பொருள்கள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 25 வீத வரி விதித்தார். இது ஓகஸ்ட் 7ஆம் திகதி அமுலுக்கு வந்தது. அத்துடன், ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி கூடுதலாக 25 விரி வரி விதித்தார். இது ஓகஸ்ட் 27 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. இதன்மூலம், இந்திய பொருள்கள் மீது 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டதால் ஓகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெற இருந்த 6 ஆவது சுற்று பேச்சுவார்த்தை தடைபட்டது.

இந்நிலையில், சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றார். ட்ரம்பின் வரி விதிப்பால், சீனாவுடன் இந்தியா நெருங்கி வருவதாக அமெரிக்காவை சேர்ந்த நிபுணர்கள் குற்றம்சாட்டினர்.

இதையடுத்து, இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தடைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும் என ட்ரம்ப் சில நாள்களுக்கு முன்பு கூறியிருந்தார். இதை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றிருந்தார்.

இந்த சூழ்நிலையில், இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தகம் தொடர்பான 6 ஆவது சுற்று பேச்சுவார்த்தை 16 ஆம் திகதி தொடங்கும் என தகவல் வெளியானது. இதற்காக, அமெரிக்காவின் வர்த்தகத் துறை துணை பிரதிநிதி (தெற்கு மற்றும் மத்திய ஆசியா) பிரெண்டன் லிஞ்ச் தலைமையிலான குழுவினர் நேற்று டில்லி வந்தடைந்தனர்.

இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைக்கான இந்திய பிரதிநிதியும், மத்திய வர்த்தகத் துறை சிறப்பு செயலருமான ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழுவினரை லிஞ்ச் குழுவினர் சந்தித்துப் பேசினர். அப்போது, இரு நாடுகள் இடையே தடைபட்ட பேச்சுவார்த்தையை தொடர்வது என ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தியா மீது 50 சதவீத வரி விதிக்கப்பட்ட பிறகு இரு நாட்டு பிரதிநிதிகளும் முதல் முறையாக சந்தித்துப் பேசி உள்ளனர்.

இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,

“இந்தியா வந்துள்ள அமெரிக்க வர்த்தகத் துறை பிரதிநிதி பிரெண்டன் லிஞ்ச் தலைமையிலான குழுவினருடன் மத்திய வர்த்தகத் துறை செயலர் தலைமையிலான குழுவினர் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இது ஆக்கப்பூர்வமாக இருந்தது. இருதரப்பும் ஏற்கக்கூடிய வகையில் ஒப்பந்த பேச்சுவார்த்தையை விரைந்து முடிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும்.” என கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவார்டு லுட்னிக் நேற்று முன்தினம் கூறும்போது,

“இந்தியாவில் 140 கோடி மக்கள் உள்ளதாக பெருமை பேசுகின்றனர். அவர்களுக்காக தலா 25 கிலோ மக்காச்சோளத்தை இந்தியா ஏன் வாங்கக் கூடாது? இந்தியா எங்களுக்கு பொருட்களை விற்பனை செய்கிறது. அவற்றுக்கு அதிக வரி விதிக்கிறது. ஆனால், எங்கள் மக்காச்சோளத்தை வாங்குவதில்லை. இனியும் எங்கள் மக்காச்சோளத்தை வாங்காவிட்டால், அமெரிக்க சந்தையை இழக்க நேரிடும்.” என்று கூறியிருந்தார்.

# இந்தியாவில் தொடரும் மழை; பல பகுதிகளில் மண்சரிவுகள்!



இந்த ஆண்டு பருவமழை ஜம்மு – காஷ்மீர், பஞ்சாப், உத்தரகண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் பெரும்பகுதிகளை கடுமையாகப் பாதித்து, பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் அங்கு ஏற்கனவே பல உயிர்களை காவு வாங்கியுள்ளன, குடியிருப்புகளையும் சீர்குலைத்துள்ளன.

மேலும் இந்த மாநிலங்களில் புதிய கனமழை பெய்து வருவதால் சேதம் தொடர்கிறது.

இந்தியத் தேசியத் தலைநகர் டில்லியில், ஓகஸ்ட் மாதத்திலும் இந்த மாத தொடக்கத்திலும் பெய்த கனமழையால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குருகிராம் முற்றிலுமாக வெள்ளத்தில் மூழ்கியது. வாகனங்கள் தண்ணீரில் மூழ்கி மிதப்பதைக் காட்டும் வைரல் காணொலிகள் வெளியாகின.

செங்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதி இடுப்பளவு நீரில் மூழ்கியிருந்ததால், வீதிகள் மூடப்பட்டு போக்குவரத்து தடைபட்டது.

நெருக்கடியை மேலும் அதிகரிக்க, கடுமையான மழை காரணமாக யமுனை நதி பல சந்தர்ப்பங்களில் அபாய அளவைத் தாண்டியது.

இதனால் நகரம் முழுவதும் வெள்ளம் ஏற்படும் என்ற அச்சம் எழுந்தது.

மும்பையில், தொடர்ந்து பெய்து வரும் மழையால் கடுமையான நீர் தேங்கியுள்ளது.

கடந்த மாதம், வெள்ளம் காரணமாக மோனோ ரயில் பழுதடைந்தது, அதே நேரத்தில் சுரங்கப்பாதைகள் மற்றும் முக்கிய வீதிகள் நீரில் மூழ்கி பயணிகள் தவித்தனர்.

ஹைதராபாத்திலும் வார இறுதி முழுவதும் பலத்த மற்றும் கடுமையான மழை பெய்தது, வீதிகள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கின, மேலும் மழையின் போது தனித்தனி சம்பவங்களில் இரண்டு பேர் காணாமல் போயினர்.

செவ்வாயன்று, பல மாநிலங்கள் இரவு முழுவதும் பெய்த மழையால் மீண்டும் புதிய அழிவுகள் பதிவாகின.

இமாச்சலப் பிரதேசத்தில் மீண்டும் கனமழை பெய்ததால், பல மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டது.

மண்டியில், திங்கள்கிழமை இரவு 11 மணிக்குத் தொடங்கிய மழை அதிகாலை 1 மணிக்கு தீவிரமடைந்ததால் மக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியேறினர்.

நிரம்பி வழிந்த சௌலி காட் நதி, தரம்பூர் பஸ் நிலையத்தை வெள்ளத்தில் மூழ்கடித்து. வெள்ளம் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பஸ்ள், வாகனங்களை அடித்துச் சென்றது. மேலும் பல வீடுகளையும் மூழ்கடித்தது.

தரம்பூர் அதிகாரிகள் கூற்றுப்படி, இரவு முழுவதும் வெளியேற்றும் பணி தொடர்ந்தது ஆனால் எந்தவித உயிரிழப்பும் பதிவாகவில்லை எனக் கூறியது.

சிம்லாவின் பிற இடங்களில், ஹிம்லாந்தில் ஏற்பட்ட ஒரு பெரிய மண்சரிவினால் பல வாகனங்கள் சிக்கிக் கொண்டன.

ஒரு முக்கிய வதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. தடைபட்டது.

திடீர் வெள்ள அபாயம் காரணமாக, அனைத்து தேசிய விளையாட்டுப் போட்டிகளும் செப்டம்பர் 30 வரை அங்கு நிறுத்தி வைக்கப்பட்டன.

மண்டி மாவட்டத்தின் நிஹ்ரி பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் குறைந்தது மூன்று பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

# காஷ்மீர் வீதிகளில் போக்குவரத்து முடக்கம்: ஆயிரம் தொன் அப்பிள்கள் அழுகி நாசமாகின



ஜம்மு காஷ்மீரில் இயற்கை பேரிடரால் சேதமான சாலைகள் விரைந்து சீரமைக்கப்படாத கராணத்தால் போக்குவரத்து முடங்கியுள்ளது.

இதனால், ஆயிரக்கணக்கான தொன் ஆப்பிள்கள் குறித்த நேரத்துக்கு அனுப்ப முடியாமல் தேக்கமடைந்து அழுகி வருவது விவசாயிகளையும், வர்த்தகர்களையும் வேதனை அடைய செய்துள்ளது.

கடந்த மாதம் கனமழை மற்றும் மேக வெடிப்பு காரணமாக ஸ்ரீநகர்– ஜம்மு தேசிய நெடுஞ்சாலை கடுமையாக சேதமடைந்துள்ளது. ஏறக்குறைய 300 மீற்றர் நீளத்துக்கு சாலைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளது. மேலும் ஆங்காங்கே பெரிய பனிப்பாறை சரிவுகளும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக செனானி–உதம்பூர், நஷ்ரி–பனிஹால் நெடுஞ்சாலைகளில் பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது.

இதனால் போக்குவரத்து முடங்கி ஏராளமான கன்டெய்னர் லொறிகள் நாள் கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 20 நாட்களாக வீதிகள் சரிசெய்யப்படாததால் கன்டெய்னர்களில் உள்ள அப்பிள்கள் அழுகும் நிலைக்கு ஆளாகியுள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் அப்பிள் வர்த்தகர்களுக்கு கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அழுகிய அப்பிள்களை பெட்டி பெட்டியாக வீதிகளில் வீசி எறியும் காணொலி தற்போது சமூக வலைதளங்களில் பரவலாக பகிரப்பட்டு வருகிறது. காஷ்மீரில் சாதாரண விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு இது பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் 80 சதவீத அப்பிள்கள் காஷ்மீரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் நிலையில் நெடுஞ்சாலை நாள் கணக்கில் மூடப்பட்டுள்ளது அதன் விநியோகத் தொடரை கடுமையாக பாதித்துள்ளதுடன் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

வீதிகள் கடந்த 20 நாள்களாக சீரமைக்கப்படாதது குறித்து ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா அதிருப்தி தெரிவித்துள்ளார். மேலும் இது தொடர்பாக அவர் மத்திய அமைச்சர் நிதின் கட்கரியுடனும்பேசியுள்ளார். அப்போதுஅடுத்த 24 மணி நேரத்தில் இதுதொடர்பாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதாக அப்துல்லாவிடம் கட்கரி உறுதி அளித்துள்ளார்.

# இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுப்பதற்கு அரபு, இஸ்லாமிய நாடுகள் தீர்மானம்



காசாவில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடியைத் தடுப்பதற்கு இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்க அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தொடுத்த போர் கடந்த 2 ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இதில் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 64 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

போரை நிறுத்த பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்தநிலையில், கடந்த வாரம் கட்டாரில் உள்ள ஹமாஸ் அமைப்பின் தலைமையகத்தைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து, அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பதற்கு அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுடனான அவசர ஆலோசனைக் கூட்டத்துக்குக் கட்டார் அழைப்பு விடுத்திருந்தது.

அதன்படி அரபு லீக் மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் அவசர உச்சி மாநாடு கட்டார் தலைநகர் தோஹாவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்களைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டன.

அத்துடன், காசாவில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடியைத் தடுக்க இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்க அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பிரித்தானியாவுக்கு சென்றார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தியோகபூர்வ பயணமாக பிரித்தானியா சென்றுள்ளார்.

அவரது இரண்டாவது பதவிக் காலத்திற்குப் பின்னர் பிரித்தானியாவிற்கு அவர் மேற்கொண்ட இரண்டாவது விஜயம் இதுவாகும்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் அவர் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ட்ரம்ப் இரண்டு நாள்கள் பிரித்தானியாவில் தங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த நேரத்தில் 50 பில்லியன் பவுண்டுகள் மதிப்பிலான அணுசக்தி ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட உள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ட்ரம்ப் பிரித்தானிய மன்னர் சார்லஸையும் சந்திக்கின்றார்.

# நேபாள பிரதமர் சுசீலா கார்கியின் புதிய அமைச்சரவை அறிவிப்பு



நேபாளத்தில் வெடித்த போராட்டங்கள் காரணமாக அந்நாட்டின் பழைய ஆட்சி அகற்றப்பட்டுள்ளது.

தற்போது இடைக்கால பிரதமராக அந்நாட்டு உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சுஷிலா கார்கி பொறுப்பேற்றிருக்கிறார்.

இந்நிலையில் அவர் புதிய அமைச்சரவையை அறிவித்திருக்கிறார்.

குறிப்பாக ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டாளராக அறியப்பட்ட ஓம் பிரகாஷ் ஆர்யாலுக்கு சட்டத்துறை அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

மொத்தம் மூன்று அமைச்சர்கள் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதில் ஓம் பிரகாஷ் ஆர்யால், உள்துறை, சட்டம், நீதி மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓம் பிரகாஷ் ஆர்யால் நேபாள நாட்டின் மிகவும் பிரபலமான வழக்கறிஞர் என்பதுடன் நேபாள நாட்டின் சட்ட அமைப்புகள், மனித உரிமைகள், மற்றும் ஊழல் ஒழிப்புக்கான செயற்பாட்டாளராக இவர் காணப்படுகிறார்.

நேபாள அரசியலில் சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருக்கிறார்.

இதேபோல் நேபாளத்தை மின்வெட்டிலிருந்து காப்பாற்றிய முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் குல்மான் கிசிங், எரிசக்தி, உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவரை தொடர்ந்து, புகழ் பெற்ற பொருளாதார நிபுணரான ராமேஸ்வர் கானல், நிதியமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 17/09/2025

## கனடாவின் பணவீக்கம் 1.9 வீதமாக உயர்ந்தது



C2▶



# கனடாவின் போக்குவரத்து அமைச்சர் கிரிஸ்டியா ப்ரீலாண்ட் பதவி விலகல்



கனடாவின் போக்குவரத்து மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சர் கிரிஸ்டியா ஃப்ரீலாண்ட், தனது அமைச்சுப் பொறுப்பை விட்டு விலக உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுப் பதவியை துறந்து உக்ரைனுக்கான சிறப்பு தூதுவர் போன்ற பொறுப்பை அவர் ஏற்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

C2▶

# இந்தியக் குடும்பம் கனடா எல்லையில் உயிரிழந்தமை தொடர்பில் ஒருவர் கைது







கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் கடுங்குளிரில், உறைபனியில், நடந்தே நுழைய முயன்று, ஒரு குடும்பமே பனியில் உறைந்து இறந்துகிடந்த சம்பவம் மூன்று நாடுகளையும் அதிரவைத்தது.

இந்நிலையில், அந்தக் குடும்பத்தை அமெரிக்காவுக்குள் கடத்த உதவிய நபர்களில் மற்றொருவர் தற்போது கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19ஆம் திகதி, இந்தியாவின் குஜராத்திலுள்ள Dingucha என்ற கிராமத்தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் (வயது 39), அவரது மனைவி வைஷாலி (வயது 37) மகள் விஹாங்கி (வயது 13)

C2▶



# கனடாவின் பணவீக்கம் 1.9 வீதமாக உயர்ந்தது

கனடாவின் மொத்த பணவீக்க விகிதம் ஆகஸ்ட் மாதத்தில் 1.9 வீதமாக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

பெட்ரோல் விலைகளின் உயர்வு பணவீக்கத்தில் முக்கிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பெட்ரோல் விலை மாதந்தோறும் 1.4 வீதம் உயர்ந்தது. வருடாந்திர அடிப்படையில் விலை இன்னும் 12.7 வீதம் குறைந்துள்ளது, ஆனால் ஜூலை மாதத்தில் இருந்த 16.1 வீதம் குறைவிலிருந்து சற்று மந்தமானது.

இதன் காரணமாகவே மொத்த பணவீக்கத்தை உயர்த்தியுள்ளது. பெட்ரோல் விலை இல்லாமல் கணக்கிடப்பட்ட பணவீக்கம் 2.4 வீதமாக உள்ளது.

இது கடந்த மூன்று மாதங்களுடன் ஒப்பிடும்போது சற்று குறைவாகும். ஓகஸ்ட் மாதத்தில் பலசரக்கு பொருள்களின் விலைகள் 3.5 வீதமாக உயர்ந்துள்ளன.

இறைச்சி வகைகளின் விலைகள் 7.2 வீதம் உயர்ந்துள்ளன வீட்டு வாடகை மற்றும் வீட்டு கடன் வட்டி செலவுகள் ஆண்டுக்கான பணவீக்கத்தை உயர்த்தும் முக்கிய காரணிகளாக தொடர்ந்தும் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## கனடாவின்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பொறுப்பு சிறப்பு தூதுவர் நிலைக்கு ஒத்ததாக இருக்கும் என்றும், அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ப்ரீலாண்ட் உக்ரைன் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரிகையாளராக இருந்த தனது 20 ஆண்டு காலத்தில் உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் வசித்த அனுபவமும் அவருக்கு உள்ளது.

கடந்த வாரம், அவர் கனடா தூதுவர் நடால்கா ஸ்மோக், முன்னாள் பிரதமர் ஜீன் க்ரெட்யென், முன்னாள் நியூஃபவுண்ட் லாண்ட் – லாப்ரடார் முதல்வர் ஆண்ட்ரூ ப்யூரி ஆகியோருடன் உக்ரைனைப் பார்வையிட்டார்.

2013 இல் பத்திரிகையாளராக இருந்த ப்ரீலாண்ட் அரசியலுக்கு வந்தார், டொராண்டோ மத்திய தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2015 தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்றபோது, அவர் சர்வதேச வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

கார்னி பிரதமராக பதவியேற்ற பிறகு, ப்ரீலாண்டுக்கு போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தகப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது.

இது அமெரிக்காவுடன் நீடித்துவரும் வர்த்தகப் பிரச்சினைகளை சமாளிக்க கார்னியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

இந்த நியமனம் உறுதி செய்யப்பட்டால், ப்ரீலாண்ட் மீண்டும் கனடா அரசியலிலிருந்து விலகி சர்வதேச அரங்கில் புதிய பொறுப்பு ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## இந்தியக் குடும்பம்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மகன் தார்மிக் (வயது 3) ஆகியோர் அடங்கிய குடும்பம் அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சியின்போது, கனடா அமெரிக்க எல்லையில் பனியில் உறைந்து பரிதாபமாக பலியானது.

அந்தக் குடும்பத்தை கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் கடத்த உதவியவர்களில் ஒருவர், Fenil Patel என்பவர் ஆவார்.

அந்த சம்பவம் தொடர்பில் இந்த நபர் மீது இந்தியாவிலும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Fenil Patel, அமெரிக்கா, அல்லது கனடாவில் ரொரன்றோ, Ottawa மற்றும் வான்கூவர் முதலான இடங்களில் ஏதாவது ஒன்றில் இருக்கலாம் அல்லது தப்பியோடியிருக்கலாம் என இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இந்நிலையில், Fenil Patel ரொரன்றோ புறநகர்ப்பகுதியில் சுதந்திரமாக வாழ்ந்துவருகின்றார் என்பது தெரிய வந்தது.

அவரைக் கைது செய்ய கனடாவை இந்தியா கோரியுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்.

கூடவே Fenil Patelஐ நாடு கடத்த அமெரிக்காவும் கோரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், அமெரிக்காவின் கோரிக்கையின்பேரில் Fenil Patel கைது செய்யப்பட்டுள்ளார் என கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# கனடாவில் கடந்த மாதம் 40,257 வீடுகள் விற்பனை

கனடாவில் வீட்டு விற்பனையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2025 ஆகஸ்ட் மாதத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வீட்டு விற்பனை அதிகரித்துள்ளதாக கனடிய வீட்டு மனை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நாடு முழுவதும் 40,257 வீடுகள் விற்பனையாகியுள்ளன. இது 2024 ஆகஸ்ட் மாத விற்பனையான 39,522 வீடுகளை விட 1.9 வீதம் அதிகமாகும்.

மேலும், மாதந்தோறும் விற்பனை 1.1 வீதம் அதிகரித்துள்ளது. மார்ச் மாதத்திலிருந்து மொத்தமாக 12.5 வீத உயர்வை கண்டுள்ளது. இது தொடர்ந்து ஐந்தாவது மாதமாக வீட்டு விற்பனை அதிகரிப்பை பதிவு செய்கிறது.

சாதாரணமாக ஒக்ரோபர் காலத்தில் புதிய வீடுகள் சந்தைக்கு வரும். அதோடு, இந்த வாரம் கனடா வங்கி வட்டி விகிதத்தை குறைத்தால், வாங்குபவர்களின் ஆர்வம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

புதிய வீட்டு பட்டியல்கள் மாதந்தோறும் 2.6 வீதம் உயர்ந்துள்ளன. ஓகஸ்ட் இறுதியில் நாடு முழுவதும் விற்பனைக்கு இருந்த வீடுகள் 1,95,453 என பதிவாகியுள்ளன.

இது கடந்த ஆண்டை விட 8.8 வீதம் அதிகம். 2025 ஆகஸ்ட் மாதத்தில் விற்கப்பட்ட வீடுகளின் சராசரி விலை 664,078 டொலர்களாக காணப்பட்டது. இது கடந்த ஆண்டைவிட 1.8 வீதம் அதிகமாகும்.



# உணவு இடைவேளையை தவிர்க்கின்றனர் கனடியர்கள்

கனடாவில் மதிய உணவு இடைவேளை மறைந்து வருவதாக புதிய ஆய்வு மூலம் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஃபாக்டர் கனடா வெளியிட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

61 வீத கனடியர்கள் தங்கள் பணி நேர மதிய உணவு இடைவேளையை முற்றிலும் தவிர்க்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

மதிய உணவு எடுப்பவர்களில் 5 பேரில் 2 பேர் தங்கள் மேசையிலேயே உண்கின்றனர் என ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணி செய்யும் மேசையிலிருந்து விலகி சிறிது நடந்து, மற்றவர்களை சந்தித்து, தூய காற்றை சுவாசித்து உண்பது, என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பலர் மதிய உணவை தவிர்த்து, அதிக உற்பத்தித் திறனைப் பெறலாம் என்று நினைக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் அது எதிர்மாறாக செயல்பட்டு, நாள் முழுவதும் சோர்வு, கவனம் சிதறல் ஏற்படுகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கருத்துக்கணிப்பில், மதிய இடைவேளை எடுத்த 38 வீதம் பேர் தங்களுக்கு மன அழுத்தம் குறைந்ததாகவும், 25 வீதமானோர் சக ஊழியர்களுடன் உறவு வலுத்ததாகவும், 24 வீதமானோர் பிற்பகல் உற்பத்தி திறன் மேம்பட்டதாகவும் கூறியுள்ளனர்.